**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**

**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>MCOP . No.56/2026</u>**

**<u>நாள் : 13.03.2026</u>**

ம.சா. 2 திரு.பிரதாப்

1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் B.E.(Mech) படித்துள்ளேன். ஒசூரில் உள்ள ருச்சா எஞ்சினியரிங் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் அங்கநாதவலசை. சம்பவ இடத்திற்கும், எனது ஊருக்கும் இடையே சுமார் 6 கி.மீ. தூரம் இருக்கும். சம்பவம் நடப்பதற்கு 5 நிமிடத்திற்கு முன்பாகவே அந்த இடத்திற்கு போய்விட்டேன். விபத்தில் இறந்துபோன நபர் பெயர் நரசிம்மன். எங்களுடன் தமிழ்வாணன் என்பவர் எங்களோடு வாலிபால் விளையாட வருவார். தமிழ்வாணன் மூலமாகத்தான் நரசிம்மனை எனக்கு தெரியும். ஆம்புலன்சில் சீரியசாக இருந்த தமிழ்வாணனை மட்டும் எடுத்துச் சென்றார்கள். அதற்குபிறகு சுயநினைவில்லாமல் இருந்த நரசிம்மனை பிரைவேட் ஆம்புலன்சு மூலமாக அனுப்பிவைத்தோம். நரசிம்மனுக்கு காதில் இரத்தம் வந்திருந்தது. சம்பவம் நடந்த இடத்தில் சுமார் 40, 50 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். கூட்டமாக இருந்ததால் திருப்பத்தூர்–திருவண்ணாமலை நோக்கி வந்த வாகனங்கள் எல்லாம் 40 அடிக்கு நிறுத்தப்பட்டுவிட்டடிது என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் ஓரமாக இருந்ததால் அதை கடந்து வாகனங்கள் சென்றுக்கொண்டிருந்துதான் இருந்தன. TN 10 BF 2482 வாகனமானது சம்பவ இடத்திலிருந்து எத்தனை அடி தூரத்தில் நின்றது என்றால் அந்த வாகனம் வேகமாக வந்து நிற்காமலேயே சென்றுவிட்டது. TN 10 BF 2482 என்பது பொலிரோ வாகனமாகும். நாங்கள் விபத்து சமயத்தில் வாலிபால் மைதனாத்தில் விளையாடிக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அந்த மைதானத்தில் இருந்த வண்ணமே TN 10 என்ற எண் கொண்ட சன்ரைஸ் பொலிரோ வாகனமானது இருசக்கர வாகனத்தின்மீது மோதியதை பார்த்தோம். நாங்கள் உடனடியாக ஓடிவந்து பார்த்தோம். அதாவது மைதானத்தில் நுழைவுவாயில் வழியாக

ஓடிவந்தபோது சன்ரைஸ் மூலமாக விபத்து ஏற்பட்டவுடன் வந்தோம். அப்போது எங்களுக்கு எதிராக TN 10 என்ற எண் கொண்ட பொலிரோ வாகனமானது நிற்காமல் எங்களை கடந்து சென்றது. சன்ரைஸ் என்பது பற்றி எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் பெயரை குறிப்பிட்டு அழுத்தமாக கேட்டதால்தான் அதன்மேல்பகுதியில் உள்ள சன்ரைஸ் என்று எழுதப்பட்டிருந்ததை தற்சமயம் கூறியதாக சாட்சி கூறுகிறார். அந்த பொலிரோ வாகனம் விபத்தை ஏற்படுத்திவிட்டு சென்ற சமயத்தில் அதன் பதிவு எண்ணை பார்த்தேனா என்றால் ஆமாம், ஓரளவுக்குத்தான் பார்த்தேன். TN 10 என்ற எழுதப்பட்டிருந்ததை பார்த்து அது சென்னை வாகனம் என்று தெரிந்துகொண்டேன். விபத்து சம்பந்தமாக லட்சுமி என்பவர் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். விபத்து ஏற்பட்ட உடன் சிகிச்சையில் இருந்த தமிழ்வாணனை பார்க்கபோனபோதுதான் லட்சுமி என்னிடம் கேட்டார். விபத்து நடந்து ஒரு மாத காலத்தில் லட்சுமி என்னிடம் கேட்டார். விபத்து சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு மறுநாள் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த சமயத்திலும் மைதனாத்தில் விசாரித்தார்கள். போலீசர் என்னை விசாரித்து கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு என்னை விசாரித்திருந்தால் விபத்து சம்பந்தமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பார்கள் என்றும், இதுநாள் வரை குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. (சாட்சி இறுதி அறிக்கை என்றால் என்னவென்று விளக்கம் கேட்டு புரிந்துகொண்டு பதிலளித்தார்), லட்சுமி கொடுத்த புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த புகாரில் TN 10 BF 2482 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா பொலிரோ பிக்கப் வாகனத்தை முந்தும்போது அந்த ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து தனது மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தினமீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு வாகனம் நிற்காமல் சென்றுவிட்டதாகவும், அவ்வாறு மோதிச்சென்ற அடையாளம் தெரியாத

வாகனத்தை கண்டுபிடித்து தருமாறு சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இதுசம்பந்தமாக திருப்பத்தூர் கிராமிய காவல் நிலைய குற்ற எண்.471/2022 என்ற வழக்கு பதிவு செய்து இதுநாள் வரை விபத்தை ஏற்படுத்திய அடையாளம் தெரியாத வாகனத்தை கண்டுபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. லட்சுமி கொடுத்த புகார் பற்றி எனக்கு தெரியாது. ஆனால் விபத்து நடநத் இடத்தில் நான் இருந்தேன் என்று சாட்சி அழுத்தமாக கூறுகிறார். உண்மையில் நான் விபத்து நடந்த இடத்தில் இருந்திருந்தால் லட்சுமியிடம் விபத்து நடந்த விதம் பற்றி கூறியிருப்பேன் என்றும், அதுபற்றி லட்சுமி போலீசாரிடம் தெரிவித்து TN 10 BF 2482 என்ற வாகனம் மற்றும் ஓட்டுநர்மீது எடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு இல்லாததால்தான் இதுநாள் வரை எந்த நடவடிகக்ையும் எடுக்கப்படவில்லை என்றால்ச ரியல்ல. நான் சொல்வதுபோல் TN 10 BF 2482 வாகனமானது விபத்து ஏற்படுத்தியிருந்தால் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பியிருக்கக்கூடும் என்றால் சரியல்ல. அவ்வாறு இல்லாததால ஆய்வுக்கு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கும் TN 10 BF 2482 வாகனத்திற்கும் எந்த சம்பந்தமும் ல்லை என்றால் சரியல்ல. TN 10 BF 2482 என்ற வாகனத்திற்கு பின்னால் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. TN 10 BF 2482 என்ற வாகனத்திற்கு பின்னால் எந்த ஒரு வாகனமும் வரவில்லை என்று சாட்சி கூறுகிறார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.